தேதி : 05.09.2023
OS.No.111/2018
வா.சா.1
பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

நான் இந்த வழக்கில் இரண்டாவது வாதி. நான் 10.02.1979 ல் பிறந்தேன். எனது பிறந்த இடம் கோயம்புத்தூர் ஆகும். என் அம்மாவழி தாத்தா, பாட்டி கோயம்புத்தூரில் வசிக்கிறார்கள். தாவா சொத்தில் என் தகப்பனாரின் பாகத்தைக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் மூன்றாம் வகுப்பு வரை அவினாசியில் படித்தேன், பின்னர் ஐந்தாம் வகுப்பு வரை மன்னார்குடியில் படித்தேன், பின்னர் ஆறாம் வகுப்பு திருச்சியில் படித்தேன், ஏழாவது, எட்டாவது வகுப்பு கோயம்புத்தூரில் படித்தேன், பின்னர் ஒன்பதாவது வகுப்பு முதல் பன்னிரெண்டாவது வகுப்பு வரை திருச்சியில் படித்தேன், என் தகப்பனாருக்கு அவ்வப்போது பணிமாறுதல் ஆனதால் மாறிமாறி படித்தேன். பட்டபடிப்பு கோயம்புத்தூரில் படித்தேன். நான் இளங்கலை பட்டம் பி.காம் படித்துள்ளேன். படிப்பு முடிந்தது முதல் பணியாற்றி வருகிறேன். தற்சமயம் கோயம்புத்தூரில் KPO துறையில் HCL தனியார் நிறுவனத்தில் பணியாற்றுகிறேன். எனது திருமணம் காதல் திருமணம். என் கணவரும் கோயம்புத்தூரில்தான் பணியாற்றுகிறார். என் தகப்பனாருக்கு பணி மாறுதல் கிடைத்த ஊர்களில் நானும், என் தாயாரும், தகப்பனாரும் சேர்ந்து வாழ்ந்து வந்தோம். எனக்கு 2001 ல் கோயம்புத்தூரில் திருமணமானது. இந்த வழக்கு விபரங்கள் என்னைவிட என் தாயாருக்கு கூடுதலாக தெரியும். என் தாயார் திருச்சி நீதிமன்றத்திற்கு பலமுறை வந்துள்ளார். தற்சமயம் என் தாயார் திருச்சியில்தான் வசிக்கிறார். நானும், என் கணவரும் குழந்தைகளுடன் கோயம்புத்தூரில் வசிக்கிறோம். என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் சாட்சி சொல்ல வரவில்லை. என் தாயாருக்கு கடந்த சில ஆண்டுகளாக நோய் ஏற்பட்டுள்ளது, முதலில் கர்ப்பப்பை பிரச்சனை இருந்தது, பின்னர் பக்கவாத நோய் பாதித்துள்ளது. என் தாயார் படுக்கையாக கிடையாது. கடந்த ஒரு வருடமாக மருத்துவ தேவைக்காக மட்டும் வெளியே போவார். உறவினர் மற்றும் நண்பர்கள் விசேஷங்களுக்கு என் தாயார் செல்வாரா என்றால் வீட்டிற்கு அருகில் மட்டும் செல்வார். என் தாயாரை வீட்டில் வைத்தே விசாரிக்க ஆணையரை நியமிக்க வேண்டி நடவடிக்கை எடுக்கவில்லை. என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் சாட்சி கூறுகிறேன் என்று பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். என் தாயாரின் மருத்துவ சிகிச்சை குறிப்புகள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் சாட்சி சொல்ல வரவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என் தாயார் சாட்சி சொல்ல வந்தால் உண்மை விபரம் தெரிந்துவிடும் என்று அவரை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் பிறந்த தேதி தெரியவில்லை. என் தாயாரின் பிறந்த தேதி 27.10.1955 ஆகும். என் தாயார் என் தகப்பனாரைவிட வயதில் மூத்தவர் கிடையாது. என் தகப்பனாரின் பிறந்த தேதி

07.11.1951 என்றால் எனக்கு தெரியாது. என் தகப்பனார் பொறியியல் படித்திருந்தார். எங்கு படித்தார் என்று தெரியாது. என் தகப்பனார் எப்போது பொறியியல் படிப்பை முடித்தார் என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் படிப்பை முடித்து எத்தனை ஆண்டுகள் கழித்து அரசு பணிக்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. என் தகப்பனார் நெடுஞ்சாலை துறையில் பொறியாளராக 1973 ல் பணியில் சேர்ந்தார். 1996 ல் என் தகப்பனார் இறக்கும்வரை பணியில் இருந்தார். A பட்டிகை சொத்தில் நான் ஆறாம் வகுப்பு படிக்கும்போதே வசித்த விபரம் எனக்கு தெரியும். என் தகப்பனார் B.E படிக்கவில்லை என்றும், டிப்ளமோ இன்ஜினியரிங்தான் படித்தார் என்றும் சொன்னால் எனக்கு சரியாக தெரியவில்லை. என் தகப்பனார் 1973 ல் பணியில் சேர்ந்தபோது என்ன வருமானம் வந்தது என்று எனக்கு தெரியாது. A அட்டவணை சொத்து யாரிடம் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. A பட்டிகை சொத்து எவ்வாறு ஒதுக்கப்பட்டு என் தாத்தா பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்ற விபரம் என் தாயார் மூலமும், உறவினர்கள் மூலமும் எனக்கு தெரியும். A பட்டிகை சொத்து கிரைய விபரங்களை 2018 ல் தெரிந்து கொண்டேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் 2018 ல்தான் விபரங்களைத் தெரிந்து கொண்டேன் என்று சொல்லியுள்ளேன். 2018 ல் யார் மூலம் தெரிந்து கொண்டேன் என்று குறிப்பாக சொல்ல இயலாது. B பட்டிகை சொத்தின் விபரம் முழுமையாக எனக்கு தெரியாது. இந்த சொத்து விபரங்களை என் சித்தப்பா ராமகிருஷ்ணன் தந்தார். அவர் இந்த வழக்கில் முதல் பிரதிவாதி. B பட்டிகை சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்று எனக்கு முழுமையாக தெரியாது. என் தகப்பனார் வழி தாத்தா பெரியசாமிபிள்ளை என்ன தொழில் செய்தார் என்று தெரியும். எனக்கு சுமார் 12 வயது முதலே என் தாத்தா கடை வைத்திருந்தார் என்ற விபரம் தெரியும். என் தாத்தா மளிகை கடை வைத்திருந்தார். தில்லைநகரில் மக்கள் மன்றத்திற்கு எதிரில் நிர்மலா ஸ்டோர்ஸ் என்ற பெயரில் என் தாத்தா மளிகை கடை வைத்திருந்தார். எந்த ஆண்டு கடை ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த கடையில் எத்தனை பேர் வேலை பார்த்தார்கள், எவ்வளவு வருமானம் வந்தது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் போதிய வருமானம் இல்லை என்பதுதான் தெரியும். போதிய வருமானம் இல்லை என்று வீட்டில் உள்ள பெரியோர்கள் சொன்னார்கள், எனக்கு நேரடியாக தெரியாது. எந்த ஆண்டு நிர்மலா ஸ்டோர்ஸ் மூடப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது. இந்த விபரங்கள் என் தாயாருக்கு நேடியாக தெரிய வாய்ப்பு உள்ளது. எனக்கு விபரம் தெரிந்த 10 அல்லது 12 வயது முதல் என் தாத்தா தொழில் எதுவும் செய்யவில்லை. என் தாத்தாவிற்கு நான்கு ஆண் வாரிசுகளும், நான்கு பெண் வாரிசுகளும் என்றால் சரிதான். அவர்களில் என் தகப்பனார் ஒரு ஆண் வாரிசு. தாவா A அட்டவணை சொத்து நான் மூன்றாவது வகுப்பு படித்தபோதே இருந்தது. திருச்சியில்

தில்லைநகரின் முக்கியமான பகுதியில் இந்த வீடு அமைந்துள்ளது. A பட்டிகை சொத்து திருச்சிராப்பள்ளி கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் வாங்கப்பட்டது என்றால் சரிதான். இந்த சங்கத்தில் உறுப்பினராக இருப்போருக்கு மட்டும்தான் இடம் ஒதுக்குவார்கள் என்ற விபரம் தெரியும். A பட்டிகை மனையில் எந்த ஆண்டு வீடு கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் தாத்தாவிற்கு நிர்மலா ஸ்டோர்ஸ் வருமானத்தைத் தவிர பூர்வீக சொத்திலிருந்து வருமானம் வந்தது. சேடப்பட்டியில் பூர்வீக சொத்து இருந்தது. சேடப்பட்டி சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. பூர்வீக சொத்து வருமானம் என்பது சேடப்பட்டி சொத்து வருமானமும், B பட்டிகை சொத்தின் வருமானமும் ஆகும். சேடப்பட்டி சொத்தை ஆரம்பம் முதலே முதல் பிரதிவாதி கவனித்து பொருள் ஈட்டி வருகிறார். முதல் பிரதிவாதியுடன் நல்ல உறவில் இருக்கிறேன் என்றால் எல்லா பிரதிவாதிகளுடனும் நல்ல உறவில்தான் இருக்கிறேன். சேடப்பட்டி சொத்து விபரத்தை முதல் பிரதிவாதியிடம் கேட்டேன், அவர் முழுமையாக சொல்லவில்லை, ஆகவே அந்த சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. என் அப்பாவின் உடன் பிறந்தவர்களுக்கு யார் திருமணம் செய்து வைத்தார்கள் என்ற விபரம் எனக்கு நேடியாக தெரியும். அந்தந்த பிரதிவாதிகளுக்கு திருமணம் நடந்த சமயத்தில் நான் நேரடியாக தெரிந்து கொண்டேன்.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.